அமைத்து பப்பைன் என்று சொல்லக்கூடிய அந்தப் பொருளை விற்பனைக்குக் கொண்டுவரும்போது அவர்களுக்கும் அரசு ஆலோசனைகள் வழங்குகிறது. அதற்காக நிதிகளைப் பெறுவதற்கும் அரசாங்கம் உதவுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

90—

கேபிள் டி.வி. ஒளிபரப்பாளர்களுக்கு கேளிக்கை வரி விதித்தல்

20192 திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "ஸ்டார் டி.வி." நிகழ்ச்சிகளை டிஸ்க் ஆன்டெனா மூலம் ஒளிப்பரப்புபவரிடமிருந்தும், கேபிள் டி.வி. மூலம் ஒளிப்பரப்புபவரிடமிருந்தும் கேளிக்கை வரி வசூலிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்டார் டி.வி. மட்டும் அல்லாது பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை டிஸ் ஆன்டெனா மற்றும் கேபிள் டி.வி. மூலமும் ஒளிபரப்புபவர்களிடமிருந்து 40 சதவீதம் கேளிக்கை வரி வசூலிக்க கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் மசோதா நிறைவேற்றப்பட்டு தற்போது அந்த மசோதா சட்டமாக்கப்பட்டு 1-9--1994 முதல் அமுலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார் டி.வி. நிகழ்ச்சிகளை டிஸ்க் ஆன்டெனா மூலம் ஒளிபரப்புபவர்களிடமிருந்தும், கேபிள் டி.வி. மூலம் ஒளிபரப்புபவர்களிடமிருந்தும் கேளிக்கை வரி வசூலிக்கப்படுவது சம்பந்தமாக அந்த நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடை உத்தரவு வாங்கியுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த பிறகு கேபிள் டி.வி. தொழில் நடத்துபவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து முதல் கட்டமாக இடைக்கால உத்தரவு ஒன்று வழங்கப்பட்டது. அந்த உத்தரவின்படி 10 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டி அவர்கள் வணிக வரித் துறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதற்கு பதிலாக 5 ஆயிரம் ரூபாய் கட்டி பதிவு செய்துகொள்ளலாம் என்றும், 40 சதவீதம் வரிக்குப் பதிலாக 20 சதவீதம் வரியை தற்போதைக்கு செலுத்தினால் போதும் என்றும் ஒரு இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்துள்ளது. இரண்டு நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றத்தில் இப்போது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ஒரு இடைக்காலத் தீர்ப்பு இரண்டு நீதிபதிகளால் வழங்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் ரூபாய் அரசு நிர்ணயித்தபடி முன்பணம் செலுத்த வேண்டும். ஆனால் வரி ஏதும் செலுத்துவதற்குத் தேவையில்லை என்ற ஒரு தடை உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் நிதிமன்றத்தில் விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் கனெக்சன் கொடுக்கும்போது முன்பணமாக ஒரு தொகையையும், மாதா மாதம் ஒரு தொகையையும் வரம்பு இல்லாமல் வாங்குகிறார்கள். இதை அரசு வரைமுறைப்படுத்தி ஒரு ஆணை பிறப்பிக்குமா? மேலும் அந்த இடைக்காலத் தடை உத்தரவை நீக்குவதற்கு, வெக்கேட் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்து அரசுக்கு வருவாய் கிடைக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எவ்வளவு தொகை வசூல் செய்தாலும் அந்தத் தொகையில் 40 சதவிகிதத்தை வரியாகச் செலுத்த வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. வரி தனியாகவும், அவர்களுடைய கட்டணம் தனியாகவும் வசூல் செய்து செலுத்தலாம். இரண்டு முறைகள் இருக்கின்றன. அந்த வகையிலே 40 சதவிகிதம் வரி செலுத்தவேண்டுமென்று சட்ட விதியில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கை நாம் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம். 19 வழக்கறிஞர்கள் கேபிள் டி.வி.

உரிமையாளர்கள் சார்பில் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் சார்பில் ஒரு வழக்கறிஞர் புதுப்புது வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வாதம் இன்று கூட உயர்நீதிமன்றத்திலே தொடர்ந்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் நல்ல தீர்ப்பு வரும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார் டி.வி, சன் டி.வி, ஜீ-டி.வி. போன்றவற்றில் தமிழ்நாடு அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது? இந்த வரியை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சட்டம் கொண்டு வந்த உடனே இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு தடை ஏற்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதனால் இதுவரையில் வருவாய் ஏதும் வந்து சேரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டார் டி.வி., ஜீ-டி.வி., மூலமாக ஒளிபரப்புவதில் ஏதும் காலம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அவர்கள் விடிய விடிய கூட ஒளிபரப்புகிறார்கள். ஆகவே இது பலபேர்களுக்கு இடைஞ்சலாகக் கூட இருக்கிறது. படிக்கின்ற மாணவர்களுக்குகூட இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு என்று ஏதாவது காலம் வரையறுத்துக் குறிப்பிடுவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி செய்தித்துறை அமைச்சருக்குக் தனியே போடவேண்டும். வரி போடுவதுதான் இவர். அதை வரைமுறைப்படுத்துவது எல்லாம் அவர். திரு. கே.பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார் டி.வி., என்றும் ஜீ-டி.வி., என்றும் மற்றும் பல்வேறு டி.வி.-க்கள் இருக்கின்றன. அவர்களெல்லாம் நிகழ்ச்சியை ஒளி பரப்புகின்றபோது அரசியல் கட்சியினுடைய சின்னங்களை முத்திரையாகப் பதித்து ஒளிபரப்புகிறார்கள். அந்த நிகழ்ச்சிகளை--அரசியல் சின்னங்களை முத்திரையாகப் பதித்து வெளிவருகின்ற நிகழ்ச்சிகள்.....

1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றியும் கேள்வி, செய்தித் துறை அமைச்சருக்குத் தனியாகப் போடவேண்டும். வணிக வரித் துறை அமைச்சர் வரி போடுவதோடு சரி.

வினா எண் 91, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

91—

காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல்

***33152 திரு. கு. சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் காடாம்புலியூரில் 1991–92–ஆம் ஆண்டு அப்பகுதியிலே இருக்கின்ற மூலப்பொருள்கள், கச்சாப் பொருள்களைக் கொண்டு உடனடியாக இரண்டாயிரம் கோடி ரூபாயில் ஒரு காகிதத் தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக கோப்பு எல்லாம் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. பின்னர், அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கிடப்பிலே போடப்பட்டு விட்டதாக அறிகிறேன். அந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் நிறைந்திருக்கின்றனர். அந்தப் பகுதி முந்திரிக்குப் பெயர் போனது. அந்தப் பகுதியில் இப்போது கரும்பு விவசாயத்திலே விவசாயிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.